www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பத்தாம் வகுப்பு

**நேரம்: 3.00 மணி** **சமூகஅறிவியல்** **மதிப்பெண்கள்: 100**

பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **14×1=14**

1) பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

2) உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை?
அ) ஐரோப்பா ஆ) லத்தீன் அமெரிக்கா இ) இந்தியா ஈ) சீனா

3) அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
அ) கவாசாகி ஆ) டோக்கியோ இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி

4) i) இராமகிருஷ்ணா மிஷன் கல்வி, உடல்நலம், பேரிடர்களின் போது நிவாரணப்பணி செய்தல் போன்ற சமூகப்பணிகளில் செயலாக்கத்துடன் ஈடுபட்டது
ii) பேரின்பநிலை எய்தும் பழக்கங்களின் மூலம் ஆன்மீதியாக இறைவனோடு இணைவதை இராமகிருஷ்ணர் வலியுறுத்தினார்.
iii) இராமகிருஷ்ணர் இராமகிருஷ்ணாமிஷனை ஏற்படுத்தினார்.
அ) (i) சரி ஆ) (i) மற்றும் (ii) சரி இ) (iii) சரி ஈ) (i) மற்றும் (iii) சரி

5) ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கோடு _______ ஆகும்
அ) சமமழைக்கோடுகள் ஆ) சம அழுத்தக்கோடுகள் இ) சமவெப்ப கோடுகள் ஈ) அட்சக்கோடுகள்

6) இந்தியாவில் தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது
அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை

7) இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்
அ) சிமெண்ட் ஆ) ஆபரணங்கள் இ) தேயிலை ஈ) பெட்ரோலியம்

8) இந்தியாவிலேயே அதிக அளவு காற்றாலைகளைக் கொண்டுள்ள மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) கேரளா இ) குஜராத் ஈ) ஒடிசா

9) நமது அடிப்படை கடமைகளை ______ இடமிருந்து பெற்றோம்
அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு
இ) ரஷ்யா அரசியலமைப்பு ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு

10) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்
அ) குடியரசுத்தலைவர் ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
இ) ஆளுநர் ஈ) பிரதம அமைச்சர்

11) மாநில அமைச்சரவையின் தலைவர்
அ) முதலமைச்சர் ஆ) ஆளுநர் இ) சபாநாயகர் ஈ) பிரதம அமைச்சர்

12) இந்தியாவில் சராசரி ஆயுட்காலம் ______ ஆண்டுகள் ஆகும்
அ) 65 ஆ) 60 இ) 70 ஈ) 55

13) இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?
அ) 1984 ஆ) 1976 இ) 1950 ஈ) 1994

14) ______ இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுத்தது.
அ) நீலப்புரட்சி ஆ) வெள்ளைப்புரட்சி இ) பசுமைப்புரட்சி ஈ) சாம்பல் புரட்சி

பகுதி - ஆ

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:-**
**வினா எண். 28க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **10×2=20**

15) பதுங்குக் குழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
16) பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது
17) பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள் பெயர்களைக் குறிப்பிடுக.
18) மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.
19) இராமலிங்க அடிகளின் சீர்த்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
20) தக்காண பீடபூமி - குறிப்பு வரைக.
21) இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



22) இடம்பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
23) செம்மொழி தகுதிபெற்ற இந்திய மொழிகள் எவை?
24) இந்திய குடியரசு தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
25) தனிநபர் வருமானம் என்றால் என்ன?
26) தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுது.
27) காலநிலையைப் பாதிக்கும் காரணிகள்
28) சமச்சீர் காலநிலை என்றால் என்ன?

## பகுதி- இ

III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண். 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும்:- 10×5=50

29) முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவாதி.
30) ஐரோப்பிய குழுமம் எவ்வாறு ஐரோப்பிய ஒன்றியமானது என்ற வரலாற்றை எழுது.
31) பெண்களின் மேம்பாட்டிற்கு 19ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து எழுதுக
32) கோடிட்ட இடத்தை நிரப்புக.
i) நாசிச ஜெர்மனியின் ரகசிய காவல்படை ______ என அழைக்கப்பட்டது.
ii) "ஒரு பைசாத் தமிழன்" பத்திரிக்கையைத் துவங்கியவர் ______
iii) உலகிலேயே மிக நீளமான அணை ______
iv) தென்னிந்தியாவின் மான்செஸ்டர் ______
v) ஆளுநர் தனது ராஜினாமா கடிதத்தை ______ கொடுக்கிறார்
33) வேறுபடுத்துக. i) மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலை
ii) வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்
ஆ) காரணம் கூறு: மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை
34) தீபகற்ப ஆறுகளை பற்றி எழுது.
35) இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினை குறிப்பிட்டு மண்ணின் பரவல் மற்றும் பண்புகளை விவரி?
36) நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?
37) இந்திய அரசியலமைப்பின் சிறப்புக்கூறுகளை கூறுக.
38) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி?
39) நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி?
0) பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுது.
1) கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1900 முதல் 1940 வரையிலான ஆண்டுகட்கு முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் எழுது
2) உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்க
i) இங்கிலாந்து ii) இத்தாலி iii) மாஸ்கோ iv) ஹவாய் தீவு v) ஜப்பான்

## பகுதி - ஈ

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:- 2×8=16

3) i) ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்க. (அல்லது)
ii) இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுது.
) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
1) இமயமலை 2) மன்னார் வளைகுடா 3) மகாநதி 4) சுந்தரவனக்காடுகள்
5) பாலைமண் 6) மின்னியல் தலைநகரம் 7) பருத்தி விளையும் இடம்
8) சென்னை - புதுதில்லி விமான வழி (அல்லது)
1) அந்தமான் நிக்கோபர் தீவுகள் 2) $K_2$ சிகரம் 3) நர்மதை ஆறு
4) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை 5) தேயிலை விளையும் பகுதி
6) நெய்வேலி 7) ஜாம்ஷெட்பூர் 8) பன்னாட்டு விமான நிலையம் ஒன்று

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

காலாண்டுத்தேர்வு – 2024 – கடலூர் மாவட்டம்

10-ம் வகுப்பு சமூக அறிவியல் – விடைக் குறிப்பு

சரியான விடை

1. அ) பிரிட்டன்
2. ஆ) இலத்தின் அமெரிக்கா
3. இ) ஹிரோஷிமா
4. ஆ) (i) மற்றும் (ii) சரி
5. அ) சம மழைக் கோடுகள்
6. இ) சணல்
7. ஈ) பெட்ரோலியம்
8. அ) தமிழ்நாடு
9. இ) ரஷ்யா அரசியலமைப்பு
10. அ) குடியரசு தலைவர்
11. அ) முதலமைச்சர்
12. அ) 65
13. ஈ) 1994
14. இ) பசுமைப் புரட்சி

சுருக்கமான விடையளி (ஏதேனும் 10 மட்டும்)

15. பதுங்குக்குழிப் போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

போர் வீரர்களால் தோண்டப்பபடும் பதுங்குக்குழிகள் எதிரிகள் சுடுதலில் இருந்து தங்களை காத்துகொள்ள உதவின.

ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கும்.

அவற்றின் வழியாக உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் ஆகியவை வந்து சேரும். புதிய வீரர்களும் வந்து சேர்வர்

16. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?

இந்திய வேளாண்மைக்கும், உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது. எ.கா. வேளாண் உற்பத்தி பொருள்களின் விலை பாதியாக குறைந்தது. வரி இரு மடங்கானது.

17. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின பெயர்களை குறிப்பிடுக

1. உலக வங்கி, 2. பன்னாட்டு நிதி அமைப்பு

18. மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.

முதலாம் உலக நாடுகள் – முதலாளித்துவ அமெரிக்க நாடுகள் குழு

இரண்டாம் உலக நாடுகள் – பொதுவுடைமை சோவியத் நாடுகளின் குழு.

இவ்விரு பிரிவிலும் சேராமல் வெளியிலிருந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் என அழைக்கப்பட்டன.

19. இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.

இராமலிங்க சுவாமிகள் தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் அனைத்து உயிரினங்களிடமும் காட்டினார். இதை அவர் ஜீவகாருண்யம் என்றார்.

1865இல் சமரச வேத சன்மார்க்க சங்கம் எனும் அமைப்பை நிறுவினார். பின்னர் அது சமரச சுத்த சன்மார்க்க சத்ய சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1865இல் பஞ்சம். எனவே 1967–ல் அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார்.

20. தக்காண பீடபூமி – குறிப்பு வரைக.
முக்கோண வடிவம் கொண்டது.
மூன்று பக்கம் கடல் மற்றும் மலைகள் சூழ்ந்துள்ளது.
கிழக்கு நோக்கி சரிந்துள்ளது.

21. இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.
தேயிலை, காபி, இரப்பர் மற்றும் வாசனைப் பொருள்கள் ஆகியவை

22. இடம்பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மக்கள் இடம் பெயர்ந்து செல்வது.
உள்நாட்டு இடப்பெயர்வு (ஒரு நாட்டின் எல்லைக்குள்)
சர்வதேச இடப்பெயர்வு (நாடுகளுக்கு இடையே)

23.இந்தியாவின் செம்மொழிகள் எவை?
தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம், ஒடியா

24. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
குடியரசுத் தலைவர், ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின் படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
வாக்காளர் குழுமம் என்பது மக்களின் பிரதிநிதிகளை குறிக்கிறது.

25. தனி நபர் வருமானம் என்றால் என்ன?
நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்க கிடைக்கும் ஈவு.
மக்களின் வாழ்க்கை தரத்தை உணர்த்தும் ஒரு கருவி
தனிநபர் வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை

26. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத்திட்டம்.
ஆரம்பக் கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம்.
பொது ICDS திட்டங்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் (General ICDS Projects and World Bank Assisted Integrated Child Development Services).
பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்.
தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்.
மதிய உணவுத் திட்டம்.

27. காலநிலையை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.
1. அட்சங்கள் 2. கடல் மட்டத்திலிருந்து உயரம் 3. கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு
4. பருவக்காற்று 5. நிலத்தோற்றம் 6. ஜெட் காற்றுகள்

28. சமச்சீர் காலநிலை என்றால் என்ன?
சமச்சீர் காலநிலை என்பது 'பிரிட்டிஷ் காலநிலை' என்றும் அழைக்கப்படுகிறது. இக்காலநிலை அதிகவெப்பமுடையதாகவோ அல்லது மிகக்குளிருடையதாகவோ இருக்காது.

**29. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி**

(1) ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிரணி சேர்க்கைகளும் :

* மூவர் உடன்படிக்கை – ஜெர்மனி, ஆஸ்திரியா – ஹங்கேரி, இத்தாலி.
* மூவர் கூட்டு நாடுகள் – இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா.

(11) வன்முறை சார்ந்த தேசியம் :

* ஒரு நாட்டின் மீதான பற்று மற்றொரு நாட்டின் மீது வெறுப்பு தோன்றியது.
* இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி –இல் தோன்றிய வன்முறை சார்ந்த தேசியம்.

(III) ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு :

* ஜெர்மனி பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியமின் ஆக்கிரமிப்பு மனப்பான்மை.
* ஜெர்மனியே உலகத்தின் தலைவன் என்றார். கப்பற்படை விரிவுபடுத்தப்பட்டது.

(IV) பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை :

* 1871 இல் அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்ஸ் ஜெர்மனியிடம் இழந்தது.
* மொராக்கோ விவகாரத்தில் பிரான்சுக்கு எதிராக ஜெர்மனி தலையிட்டது.

(V) பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு
1908இல் துருக்கியில் இளம் துருக்கியர் புரட்சி நடைபெற்றது.

(VI) பால்கன் போர்கள் :

* முதல் பால்கன் போரில் துருக்கி தோற்கடிக்கப்பட்டது.
* இரண்டாவது பால்கன் போரில் பல்கேரியா தோற்கடிக்கப்பட்டது.

(VII) உடனடிக் காரணம் :

* ஆஸ்திரியப் பேரரசரின் வாரிசு பிரான்ஸ் பெர்டினாண்டு படுகொலை.

செராஜிவோ நகரில் ஒரு செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.

**30. ஐரோப்பியக்குழுமம் எவ்வாறு ஐரோப்பிய ஒன்றியமானது என்ற வரலாற்றை எடுத்தியம்புக**

பத்து நாடுகள் லண்டனில் மே 1949 இல் கூடி ஐரோப்பியச் சமூகத்தை உருவாக்குவதற்காக கையொப்பமிட்டன.

பகைமையை ஒடுக்கவும், அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவும், படைபலத்தை நிறுவவும், பொருளாதார மற்றும் இராணுவ வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவும் நிறுவப்பட்டது.

ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகம்:

ஐரோப்பியப் பாதுகாப்பு சமூகமும் ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூகமும் துவக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம் என்ற அமைப்பை உருவாக்கினர்.

ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம் பொதுவான விவசாயக் கொள்கை, பொதுவான வெளிநாட்டு வணிகத்தை உருவாக்கியது.

ஒற்றை ஐரோப்பியச் சட்டம்:

ஐரோப்பிய ஒற்றைச் சட்டத்தை 1987 ஜூலை 1 இல் கொண்டு வந்தனர்.

பொருளாதார சமூகத்தின் எல்லைகளை விரிவாக்கியதுடன் உறுப்பு நாடுகளின் வெளியுறவுக் கொள்கையில் அதிகமான ஒத்துழைப்பையும் நாடியது.

ஐரோப்பியக் ஒன்றியம்:

1922 பிப்ரவரி 7 இல் ஐரோப்பியக் இணைவை நெதர்லாந்து மாஸ்டிரிக்ட் மாநாடு உறுதிப்படுத்தியது.

இன்றளவில் ஐரோப்பியக் இணைவில் 28 உறுப்பு நாடுகள் பெல்ஜியத்தின் பிரெசெல்ஸ் நகரைத் தலைமையமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

ஒற்றை நாணய முறை
பொதுவான நிதிக் கொள்கையை ஏற்றுக்கொண்டது.

அதன்படி 2002 ஜனவரி 1 இல் ஐரோப்பியக் ஒற்றை நாணய முறை யூரோ–வை அமலுக்கு கொண்டு வந்தது.

**31. பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.**

இராஜா ராம் மோகன் ராய் : சதி வழக்கம், குழந்தை திருமணம், பலதார மணம் – எதிர்த்தார். 1929 இல் சதி வழக்கம் ஒழிப்புச் சட்டம் இயற்றிட பாடுபட்டார்.
ஈஸ்வர சந்திர வித்யாசாகர் : 1856 இல் விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றிட பாடுபட்டார். 1860 இல் திருமண வயது சட்டம் இயற்ற காரணமாக இருந்தார்.
எம்.ஜி. ரானடே : விதவை மறுமணச் சங்கம், தக்காண கல்வி கழகம் – நிறுவினார். பெண் கல்வி மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்காக உழைத்தார்.
சுவாமி தயானந்த சரஸ்வதி : குழந்தைத் திருமண முறை வழக்கத்தை கண்டித்தார். விதவைகள் மறுமணம் செய்ய வேதத்தில் மறுக்கவில்லை என்றார்.
ஜோதிபா பூலே : உயர்குல விதவைப் பெண்களின் மறுமணத்துக்காக போராடினார். பெண்கல்வி ஆதரித்தார். விதவைகள் தங்கும் விடுதிகள் திறந்தார்.
பிற சீர்திருத்தவாதிகள் : பெர்ரம்ஜி மல்பாரி – குழந்தைத் திருமணத்துக்கு எதிரான இயக்கம் நடத்தினார். பாபா ராம்சிங் – ஆணுக்கு பெண் சமம் என்றார். விதவை மறுமணத்தை ஆதரித்தார்.

**32. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. கெஸ்டபோ
2. அயோத்திதாசர்
3. ஹிராகுட்
4. கோயம்புத்தூர்
5. குடியரசு தலைவரிடம்

**33. வேறுபடுத்துக**

| | | |
|---|---|---|
| 1 | மேற்கு தொடர்ச்சி மலை | கிழக்கு தொடர்ச்சி மலை |
| | மேற்கில் உள்ளது | கிழக்கில் உள்ளது |
| | தொடர்ச்சியானது | தொடர்ச்சியற்றது |

| | | |
|---|---|---|
| 2 | வேளாண் சார்ந்த தொழிலகங்கள் | கனிமம் சார்ந்த தொழிலகங்கள் |
| | வேளாண் பொருட்கள் மூலப்பொருட்கள் | கனிமப் பொருட்கள் மூலப்பொருட்கள் |
| | தொழிலாளர்கள் சார்ந்தது | இயந்திரங்கள் சார்ந்தது |

ஆ. மலைப்பகுதிகள் சமவெளியை விட குளிரானது.
உயரே செல்லச் செல்ல பளிமண்டல வெப்பம் குறைவதால்.

**34. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி**

1. கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள் :
1. மகாநதி :
* சத்தீஸ்கார் மாநிலத்தில் ராய்ப்பூர் மாவட்டத்தில் உற்பத்தியாகிறது.
* ஒடிசா வழியாகப் பாய்ந்து, வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
2. கோதாவரி :
மகாராஷ்ட்ராவில் உற்பத்தியாகிறது. சிறப்பு பெயர் – விருத்த கங்கா.
ஆந்திரா வழியாக பாய்ந்து, வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
3. கிருஷ்ணா :
மகாராஷ்ட்ராவில் உற்பத்தியாகி ஆந்திரா வழியாக பாய்கிறது.
* ஹம்சலாதேவி என்ற இடத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
4. காவேரி :
* கர்நாடகா மாநிலத்தில் உற்பத்தியாகி தமிழ்நாடு வழியாக பாய்கிறது.
* பூம்புகார் என்ற இடத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
II. மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் :

1. நர்மதை :
* மத்திய பிரதேசத்தில் அமர்கண்டாக் பீடபூமியில் உற்பத்தியாகிறது.
காம்பே வளைகுடா வழியாக அரபிக் கடலில் கலக்கிறது.
2. தபதி :
மத்திய பிரதேசத்தில் முல்டாய் என்ற இடத்தில் உற்பத்தியாகிறது.
காம்பே வளைகுடா வழியாக அரபிக் கடலில் கலக்கிறது.

**35. இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.**

| மண் | பண்புகள் | காணப்படும் இடம் | விறையும் பயிர் |
|---|---|---|---|
| வண்டல் மண் | காதர், பாங்கர். படிய வைப்பதினால் உருவாகிறது | கங்கை, பிரம்ம புத்திரா மற்றும் ஆறுகளின் முகத்துவாரமப் பகுதி | நெல், கோதுமை, கரும்பு |
| கரிசல் மண் | தக்காணப் பகுதியில் உள்ள பசால்ட் பாறைகளில் இருந்து உருவானது. | மகாராஷ்டிரா மற்றும் மாளவப் பீடபூமி | பருத்தி, திணை வகைகள், புகையிலை |
| செம்மண் | பழமையான படிக பாறைகளான கிரானைட், நைஸ் போன்ற பாறைகள் சிதைவடைவதால் உருவாகின்றன | கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா | கோதுமை, நெல், பருத்தி, கரும்பு |
| சரளை மண் | மண்சுவரல் (leaching ) காரணமாக உருவாகிறத | அசாம் குன்றுகள்,கேரளா மற்றும் கர்நாடகா | காபி, இரப்பர், முந்திரி மற்றும் மரவள்ளிக் கிழங்கு |
| காடு மற்றும் மலை மண் | பௌதீக சிதைவின் காரணமாக உருவாகின்றது. | ஜம்மு–காஷ்மீர், லடாக் பகுதிகள் இமாச்சல் பிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம் | காபி, தேயிலை, நெல், மக்காச் சோளம், |
| வறண்ட பாலை மண் | ஆவியாதல் அதிகமாக இருப்பதால் மேல் மண் வறண்டு காணப்படுகிறது. | இராஜஸ்தான், குஜராத்தின் வட பகுதி, பஞ்சாப் | திணை வகைகள், பார்லி, பருத்தி, |
| உப்பு & கார மண் | தீங்கு விளைவிக்கக் கூடிய உப்புகள் நுண்புழை நுழைவு காரணமாக | ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், பீகார், உத்தரப்பிரதேசம், | பயிர்கள் வளர ஏற்ற சூழ்நிலை இல்லை. |
| களிமண் சதுப்பு நில மண் | உயிரினப் பொருட்களிலிருந்து ஈர காலநிலை உள்ள பகுதி | தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகள், மேற்கு வங்கத்தில் உள்ள சுந்தரவனப் பகுதிகள், | நெல், சணல் |

**36.நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?**
கிராமப்புற சமுதாயம் நகர்புற சமுதாயமாக மாற்றமடைவது நகரமயமாக்கம்.
இந்தியாவில் நகரமயமாக்கலால் ஏற்படும் பிரச்சனைகள்:

நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.
நகர்புறங்களில் மக்கள் நெருக்கடியை தோற்றுவிக்கிறது.
நகர்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.
குடிசைப் பகுதிகள் தோன்ற காரணமாக உள்ளது.
போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.
குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது.
வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன.
திடக்கழிவு மேலாண்மையை சிக்கலாக்கிறது.
குற்றங்கள் அதிகரிக்க காரணமாகின்றன.

37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.
இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.
இது நெகிழாத்தன்மை மற்றும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.
கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.
இந்தியாவைச் சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.
சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்த வித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.

38. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
அமைச்சரவை தொடர்பானவை
முதலமைச்சர் அமைச்சர்களை நியமித்து துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.
ஆளுநர் தொடர்பானவை
கீழ்க்காணும் அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.
மாநில அரசு வழக்குரைஞர், மாநில தேர்தல் ஆணையர்
அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
மாநில திட்டக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
மாநில நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
சட்டமன்றம் தொடர்பானவை
சட்டமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கவும் ஒத்திவைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.
சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.
சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார்.

39. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துகளை விவரி.

1. மொத்த நாட்டு உற்பத்தி (GNP)
மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்த நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.
2. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள் + பணிகள்) களின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.
3. நிகர நாட்டு உற்பத்தி (NNP)

மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.

நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP) – தேய்மானம்.

4. நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)

நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் (தேய்மான செலவின் அளவு) கழித்து பின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.

நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – தேய்மானம்.

5. தலா வருமானம் (PCI)

தலா வருமானம் என்பது மக்களின்வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும். நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.

தலா வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை

6. தனிப்பட்ட வருமானம் (PI)

நேர்முக வரிவிதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம்.

7. செலவிடத் தகுதியான வருமானம் (DI)

தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானத்தை செலவிடத் தகுதியான வருமானம் எனப்படுகிறது.

40. பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.

பன்னாட்டு நிறுவனங்களின் நன்மைகள்

குறைந்த விலையில் தரமான பொருள்

பரிவர்த்தனை செலவு இல்லை.

நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.

வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கின்றன.

பன்னாட்டு நிறுவனங்களின் தீமைகள்


சுற்றுசூழலில் தீங்கினை உருவாக்க வாய்ப்புள்ளது.


உள்ளூர் வணிக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

சில தயாரிப்புகளின் முற்றுரிமையை வளர்க்கிறது

ஒழுக்க நெறிமுறைகளை மீறுதல்.

41. காலக்கோடு





42. இந்திய வரைபடம்.

43. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க

ஐ.நா. சபையின் அமைப்பு :

பொதுச் சபை – உலக நாடுகள் அனைத்தும் பிரதிநிதிகள்.

பாதுகாப்புச் சபை – 5 – நிரந்தர உறுப்பினர்கள், 10 – தற்காலிக உறுப்பினர்கள்.

செயலகம் – ஐ.நா. சபையின் செயல்பாட்டு அங்கம். பொது செயலாளர் உள்ளார்.

பன்னாட்டு நீதிமன்றம் – தலைமையகம் திஹேக் நகரில் அமைந்து உள்ளது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பொருளாதார மற்றும் சமூக மன்றம் – பல பணிகளை ஒருங்கிணைக்கிறது.
இதர அமைப்புகள் – WHO, FAO, UNESCO, UNICEF.
ஐ.நா. சபையின் செயல்பாடுகள் :
1960 களில் காலனி ஆதிக்கத்தை நீக்க செயலாற்றியது.
அகதிகள் பிரச்சனை, பருவகால மாற்றம் – கையாள்கிறது.
மனித உரிமைகள், பாலினச் சமத்துவம் – கவனம் செலுத்தியது.
மோதல்கள் நடைபெற்ற பகுதிகளில் ஐ.நா. அமைதிப்படை பணியாற்றியது.

43. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக


• இந்திய பருத்தி நெசவாலைகள்
• இந்தியா, பருத்தி உற்பத்தியில் உலகின் மூன்றாவது பெரிய நாடாகவும் தறிகளிலும், நூற்பு கருவிகளின எண்ணிக்கையிலும் முதன்மை நாடாகவும் உள்ளது.
• பருத்தி நெசவாலைகளின் பரவல்
• மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்கம், உத்திரப்பிரதேசம், தமிழ்நாடு
• தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், கரூர், சென்னை, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்கடி, சேலம் மற்றும் விருதுநகர்
• இந்தியாவில் இப்போது 1719 பருத்தி நெசவாலைகள் உள்ளன.
• மும்பை – இந்தியாவின் மான்செஸ்டர்
• மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதியில் பருத்தியாலைகள் செரிந்து காணப்படுவதால் இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுகிறது
• கோயம்புத்தூர் – தென்னிந்தியாவின் மான்செஸ்டர்
• தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூரில் அதிக எண்ணிக்கையிலான பருத்தி நெசவாலைகள் உள்ளதால் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது.

44. உலக வரைபடம்.










M.Maria Anthuvan
GHS, Kattukudalore
CuddaloreDt.,
9443282980